STC.No300/2025 **PW1.திரு.வளையாபதி**

தேதி– 29.01.2026

எதிரி ஆஜர்.

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1. எதிரி எனக்கு உறவினர் இல்லை என்றால் சரிதான். எனக்கும்,எதிரியின் கணவருக்கும் பழக்கம் இல்லை என்றால் சரிதான். எதிரி என்ன வேலை செய்கிறார் என்றால் எனக்கு தெரியாது. நான் தேனி மாவட்டம், உத்தமபாளையம், அனுமந்தன்பட்டியில் வாழ்ந்து வருகிறேன் என்றால் சரிதான். எதிரி மதுரை டவுன், கொடிகுளத்தில் வாழ்ந்து வருகிறேன் என்றால் சரிதான். எதிரியை எனக்கு செந்தில்குமார் மூலம் தெரியும் என்றால் சரிதான். எதிரியை எனக்கு செந்தில்குமார் மூலம் தெரியும் என்பதை எனது நிரூபண வாக்குமூலம், வழக்கறிஞர் அறிவிப்பிலும் கூறவில்லை என்றால் சரிதான், ஆனால் எதிரியை எனக்கு செந்தில்குமார் மூலம் தெரியாது.

2. 2022ம் டிசம்பர் மாதத்தில் 5 சதவீத வட்டிக்கு ரூ.1 லட்சம் எதிரிக்கு நான் கொடுத்தேன் என்றால் இல்லை. வட்டி மற்றும் அசல் சேர்த்து மாதந்தோறும் 03ம் தேதி எதிரி செந்தில்குமார் மூலம் g-payயில் ரூ.5000/-எனக்கு செலுத்தினார் என்றால் செந்தில்குமார் என்னிடம் வாங்கிய தொகையை அவர் திருப்பி செலுத்தினார். உண்மையில் எதிரி வாங்கிய பணத்தை செந்தில்குமார் மூலம் செலுத்தினார் என்றும், தற்போது செந்தில்குமார் மூலம் எதிரி பணம் செலுத்தவில்லை என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. செந்தில்குமார் என்னிடம் எவ்வளவு பணம் வாங்கினார் என்றால் ஞாபகமில்லை.

3. கடந்த 16.07.2025 தேதியன்று எதிரி என்மீது கே.புதூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார் என்றால் சரிதான். அதன் பேரில் என்னை காவல்நிலையத்தில் விசாரித்தார்களா என்றால் சரிதான். மேற்படி புகாரில் நான் வாக்குமூலம் எழுதி கொடுத்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலத்தை நான் எழுதி கொடுத்தேன் என்றால் சரிதான். **மேற்படி வாக்குமூலம் எ.ம.சா.ஆ.1 ஆகும்.** மேற்படி புகார்

மனு சம்மந்தமாக எனது வழக்காவணங்களில் குறிப்பிடவில்லை என்றால் பொய்யான புகார் என்பதால் குறிப்பிடவில்லை. இவ்வழக்கினை 10.09.2025 ம் தேதியன்று தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். வழக்கின் புகார் மனுவிலும் காவல்நிலையத்தில் எதிரி புகார்கொடுத்தது சம்மந்தமாக கூறவில்லை என்றால் சரிதான்.

4. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 ல் உள்ள தேதி, பெயர், தொகை ஆகியவை ஒரு மையினாலும், கையொப்பம் மற்றும் ஆங்கிலத்தில் தொகை எழுதப்பட்ட எழுத்துக்களின் மையும் வெவ்வேறாக உள்ளது என்றால் சரிதான். எதிரி செந்தில்குமார் G– pay மூலம் ரூ.60000/–ம், மதுரை சுந்தரம் பார்க்கில் வைத்து எதிரி என்னிடம் ரூ.40000/– கொடுத்தார் என்றால் சரியல்ல. பணத்தை கொடுத்துவிட்டு எதிரி காசோலை கேட்டபோது வட்டி தரவேண்டுமென நான் கூறினேன் என்றால் சரியல்ல. செந்தில்குமார் பணத்தை கொடுத்து காசோலையை கேட்டபோது நான் தரமறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல.

5. எதிரி செந்தில்குமார் மூலம் கொடுத்த காசோலையை வைத்து நான் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி சட்டப்படியான பணம் தர எதுவும் இல்லை என்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.01.29 18:04:18 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam